திரு. ஆர். பொன்னப்ப நாடார் : கன்னியாகுமரி ஜில்லாவிலே இப்போது ரி-சர்வே முடிந்து விட்டது. இப்போது முன்னே இருந்த ரெவின்யூ ரெக்கார்டுகளை எல்லாம் டிஸ்ட்ராய் செய்யவேண்டுமென்று போர்டு ஆப் ரெவின்யூவில் இருந்து ஆணை பிறப்பிக்கப்பட்டிருப்பதாகக் கேள்விப்படுகிறேன். அந்த மாதிரி ரெக்கார்டுகளை டிஸ்ட்ராய் செய்தால் பேராபத்து ஏற்பட்டுவிடும். ஆகவே, அந்த உத்தரவை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுமா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய யோசனையைக் கருத்தில் எடுத்துக் கொள்ளலாம்.

THIRU K. VINAYAKAM : Sir, with due deference to the Hon. Minister for Food, may I draw your attention to the fact that the word 'cadastral' means what I stated. Of course, it is a foreign word and I depend upon the dictionary for its elucidation and it is not correct when the Hon. Minister says that 'cadastral' means initial survey. So, will the Hon. Minister take steps to find out from the files or whatever records he has in his possession and rectify the mistake in regard to this matter ?

THE HON. THIRU K. A. MATHIALAGAN : The answer is very clear. The word 'cadastral' is applicable to lands which have not been surveyed. The present method is done by diagonal and offset system and the old system has become obsolete.

எண்ணமங்கலம் பால் பண்ணைத் திட்டம்.

***130 வின.—திரு. ஈ. எம். நடராசன்:** மாண்புமிகு உணவு—வருவாய்த் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தாலூகா, எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணைத் திட்டத்திற்காக பாரஸ்டு நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டதா ?

(இ) இப்பொழுது அந்தப் பால் பண்ணைத் திட்டம் எந்த நிலையில் இருக்கிறது ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன் : (அ) அன்டு (இ) கோயம்புத்தூர் மாவட்டம், பவானி வட்டம், எண்ணமங்கலம் கிராமத்தில் பால் பண்ணை ஒன்றை ஏற்படுத்தும் செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. ஈ. எம். நடராசன் : பால் பண்ணைக்காக அந்த இடத்தில் நிலம் ஆர்ஜிதம் செய்யப்பட்டிருக்கிறது. ஆனால் அந்த இடத்தில் தற்போது பால் பண்ணை செயல்படவில்லை. அந்த இடத்திலே தற்போது எள், சோளம் போன்ற பயிர்களை வைத்துக்கொண்டிருக்கிறார்கள். அதைத் தடுத்து அந்த இடத்தில் பால் பண்ணை வைத்து நடத்த அரசாங்கத்திற்கு உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: அப்படிப்பட்ட செயற்குறிப்பு ஒன்றும் இல்லை.

டோரிஸ் படகுகள்.

***131 வின.—திரு. டி. மார்டின் :** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) டோரிஸ் திட்டத்தின் அடிப்படையில் நடப்பு ஆண்டில் அரசு ஏதேனும் விசைப்படகை பிரான்சு நாட்டிலிருந்து பெற்றுக்கொண்டது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் விபரம் என்ன ?

1968 ஆகஸ்ட் 24]

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: (அ), அண்டு (இ) பிரான்ஸ் நாட்டுச் சட்டமன்றத்தின் உறுப்பினர் திரு. எம். க்ளேவியன் அவர்கள் தலைமையில் வந்துள்ள நான்கு பிரெஞ்சு மீனவர்கள் குழு ஒன்று கருவிகளுடன் பொருந்திய இரு டோரிஸ் படகுகளைத் தமிழ்நாட்டுக் கடற்கரையில் கட்புல விளக்கத்திற்காக (Demonstration) தங்கள் சொந்தச் செலவில் கொண்டு வந்தது. இந்தப் படகுகள் 8 மீட்டர் நீளம் உள்ளவை. ஒரு படகிற்கான செலவு ஏறத்தாழ ரூ. 16,000 என்று மதிப்பிடப்பட்டுள்ளது. மீன்கள் நீரில் எந்த இடத்தில் உள்ளன என்பதைக் காட்டக்கூடிய மீன் கருவி அதில் பொருத்தப்பட்டுள்ளது. அவற்றில் 4 பரித்திறன் கொண்ட பொறி உள்ளது. கரையிலிருந்து 5 முதல் 30 மைல் வரையிலும்சென்று 270 அடிவரை ஆழமுள்ள இடங்களில் மீன் பிடிக்க அவை உதவும். வீசுவலை போட்டு மீன் பிடிக்க அவை உதவுகின்றன. இப் படகுகளை விட்டு வைக்க துறைமுக வசதிகள் தேவையில்லை. இவற்றைக் கரையில் கட்டி வைக்க இயலும். பிரெஞ்சு நாட்டுக் குழுவின் உதவியுடன் முன்னோடி முறையில் மீன்பிடி வேலைகள் 1968-ம் வருடம் பிப்ரவரி மாதம் 1-ம் தேதி முதல் துவக்கப்பட்டன. மீனளத்துறை சோதனைகளைத் தொடர்ந்து நடத்துவதற் கென இந்த இரண்டு படகுகளையும் விட்டு விட்டு பிரெஞ்சு குழு 1968-ம் வருடம் மார்ச் மாதம் 15-ம் தேதியன்று சென்னையிலிருந்து புறப்பட்டுச் சென்றது. முதற்கண் மூன்று திங்கள்கட்கு ரூ. 6,301 செலவில் இந்த இரண்டு டோரிஸ் படகுகளின் உதவியுடன் முன்னோடி முறையில் மீன்பிடி வேலைகளைத் தொடர்ந்து நிறைவேற்ற அரசாங்கம் ஒப்பளிப்பு வழங்கி யுள்ளது.

திரு. டி. மார்டின் : பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் இந்தப் படகுகள் எந்தெந்தக் கடல் பகுதிகளில் மீன் பிடிக்கப் பயன் படுத்தப்பட்டு வருகின்றன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: சென்னையை அடுத்துள்ள கடற் கரையோரப் பகுதிகளில்தான் மீன்பிடித் தொழிலுக்காகப் பயன்படுத்தப் பட்டு வருகின்றன.

கடற்பாசி உரம்.

***132 வினு.—திரு. வி. கே. கோதண்டராமன் :** மாண்புமிகு வேளாண் மைத்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினக்களுக்கு விடை யளிப்பாரா—

(அ) விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்கு கடற்பாசியை உரமாக உபயோகப்படுத்துவதற்கான ஆராய்ச்சி செய்யும் உத்தேசமுண்டா ?

(இ) ஆம் எனில், அதன் விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) அண்டு (இ) 1954–55-ம் ஆண்டில் ஆடுதுறை வேளாண்மை ஆராய்ச்சி நிலையத்தில் நடத்திய சோதனைகளின் விளைவாக, கடற்பாசி உரம் வழங்கப்பட்ட நிலங்களில் கிட்டியுள்ள விளைச்சல் மிக்க குறைவானதே என்பது கண்டுபிடிக்கப்பட்டது.

திரு. வி. கே. கோதண்டராமன் : அதை மேலும் நல்ல முறையில் பயன்படுத்தக்கூடிய அளவுக்கு ஆராய்ச்சி செய்வதற்கு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது உண்மையா ? இல்லையென்று சொன்னால் இனிமேலாவது அப்படி ஆராய்ச்சி செய்வதற்கான உத்தேசம் உண்டா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கடற்பாசியைச் சுத்த நீரில் கழுவி உரம் தயாரிப்பதால் ஓரளவு நன்மைதான் ஏற்படுகிறது. கடல் நீரிலிருந்து எடுக்கப்பட்ட பாசியைச் சுத்த நீரில் கழுவாமல் அப்படி உப யோகித்தால் போதுமான பலன் ஏற்படவில்லை. குறுவை, தாளடி ஆகிய இரண்டு சாகுபடிகளில் அதைப் பயன்படுத்திப் பார்த்ததில் எதிர்பார்த்த பலன் கிடைக்காத காரணத்தால் அது கைவிடப்பட்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் : வினு நேரம் முடிவுற்ற போதிலும் அவையின் அனுமதியோடு மேலும் சிறிது நேரம் எடுத்துக் கொள்கிறேன். மு.ப. 10–00